தென்றலில்
தவழ்ந்து வரும்
அபர்ணாலயாவின்
புதுவசந்தம்
இடம்: கைலாசபதி கலை அரங்கம்
காலம்: 20 - 08 - 1994
காலை 9 மணி
சனிக்கிழமை மாலை 5மணி
(சி-8868)

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 27 வெள்ளிக்கிழமை (12 - 08 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 257

ராகங்களில்
இது புதியது
அபர்ணாலயாவின்
புதுவசந்தம்
இடம்: கைலாசபதி கலை அரங்கம்
காலம்: 20 - 08 - 1994
காலை 9மணி
சனிக்கிழமை மாலை 5மணி
(சி-8868)

மன்னார் நகரில் 8 பொலீஸார் பலி!

ராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் நகரத்தில் அமைந்துள்ள பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 8 அதிகாரிகள் உட்பட 8 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கண்ட தகவலை நேற்று இரவு வெளியிட்டனர்.

விடுதலைப் புலிகள் சிறிய ரக ரொக்கட்டுகள் மற்றும் மோட்டார் கிரனேட்டுகள் கொண்டு தாக்கியதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து மன்னார் நகரப் பகுதியில் நேற்று படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-க-15 3)

வடக்கு-கிழக்கு இணைப்பை சந்திரிகாவும் எதிர்க்கிறார்!

சமாதான முயற்சிகள் தோற்றால் யுத்த நடவடிக்கை எடுப்பாராம்

கொழும்பு, ஒகஸ்ட் 12

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டிருப்பதை தாம் எதிர்ப்பதாக, சந்திரிகா குமாரணதுங்காவும் அறிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதான முயற்சிகள் தோல்வி காணும் பட்சத்தில் — விடுதலைப் புலிகள் தமது யுத்தத் தோற்றத்தை மாற்றாவிடின் — விருப்பம் இன்றியேனும் யுத்த நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும் — என்றும் சந்திரிகா கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் ஆலோசித்து வருவதாகவும் — ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தாம் எண்ணியுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் இந்த விவரங்களை அவர் வெளியிட்டார்.

இன்னும் நான்கு நாட்களில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்காவின் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி, பிரதமராகப் பதவி ஏற்பார் என்று நம்பப்படும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நேற்று உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குச் சிறப்புப் பேட்டி ஒன்றை வழங்கினார்.

இனப் பிரச்சினை சம்பந்தமாக அவரிடம் பல கேள்விக் கணைகளைச் செய்தியாளர் தொடுத்தனர். அவற்றுக்குப் பதிலளிக்கையில் சந்திரிகா தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

★ வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் நிரந்தரமாக இணைக்கப்படவேண்டும் என்ற தமிழர்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழரின் வாக்குகள் குறித்து கட்சிகளுக்கு நாட்டமில்லை

பீ. பீ. ஸி. செய்தியாளர் கண்ணோட்டம்

கொழும்பு, ஓ. 12

எதிர்வரும் தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதற்குப் போதுமான ஆர்வத்தை ஐ. தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் காட்டுவதாகத் தெரியவில்லை. தற்போதைய யுத்தத்தை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வருவது என்பது பற்றியும் இரு கட்சிகளும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதியாக எதுவும் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ சட்டத்தை பிரகடனம் செய்து ஆட்சியை ஒப்படைக்க அரசு மறுக்கலாம்

இப்படிக் கூறுகிறார் சந்திரிகா

கொழும்பு, ஓ. 12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றியீட்டும் பட்சத்தில் இராணுவச் சட்டத்தை பிரகடனப்படுத்தியாவது ஆட்சியை ஒப்படைக்காதிருக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

சந்திரிகா குமாரணதுங்க இத்தகவலை நேற்று நடந்த உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் மாநாட்டில் வெளியிட்டார்.

எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற விகிதாசார தேர்தல் முறையே முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் அவர் கூறினார். (இ-எ 6)

குடும்பத்தை பிளவுபடுத்தும் அனுராவின் முயற்சி தோல்வி

சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஓ. 12

தமக்கும் தாயார் சிறிமாவோவுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்த அரசின் ஏற்பாட்டில் அனுரா பண்டாரநாயக்கா எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்து விட்டதாக சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

''நான் எனது உயிரை துச்சமாக மதித்தே தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மீண்டும் பங்குபற்றி வருகின்றேன்'' — என்றும் அவர் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

சந்திரிகா தமது பெயரிலான உல்லாசப்பயண ஹோட்டல் ஒன்றில் மதுபானம் விற்பனை செய்ய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார் என்று ஆளும் கட்சியினர் செய்துவரும் பிரசாரம் பற்றிக் கேட்டபோது —

''சம்பந்தப்பட்ட உல்லாசப் பயண ஹோட்டல் எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சொந்தமானது ஆகும். அதன் தற்போதைய உரிமையாளர் அனுரா பண்டாரநாயக்கா'' — என்று சந்திரிகா பதிலளித்தார். [இ-எ-6]

சந்திரிகாவை திணறடித்த செய்தியாளர்கள்

கொழும்பு, ஒக. 12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நேற்று நடத்திய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செய்தியாளர்கள் மாநாட்டில் இனப் பிரச்சினை குறித்து செய்தியாளர்கள் சரமாரியாகக் கேள்வி எழுப்பினர்.

பெரும்பாலான கேள்விகளுக்கு சந்திரிகா தயக்கமின்றி நேரடியாகப் பதில் அளித்தார். (இ-எ-6

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில்?

கொழும்பு, ஓ. 12

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினி ஆகியவற்றை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி விஜேதுங்கா இன்று வெளியிடவிருப்பதாகவும்—

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகும் என்றும்—

''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவன் நேற்று பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

தமது பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ஒருவர் முக்கியமான தேர்தல் ஒன்று நடைபெற இன்னும் சில தினங்கள் இருக்கையில், [illegible] தொடர்பு சாதனங்கள் இரண்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சித்துள்ளது சந்தேகத்துக்கிடமான ஒன்றாக அமைகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இப்போது வானொலியும் [illegible] [இ-எ-6]

முச்சந்தி முரளி



அப்ப தேர்தல் நெருங்க, நெருங்க சுருதி மாறுதென்று சொல்லுங்கோ......!

வெளிநாட்டு தூதர்களை சந்திரிகா சந்தித்தார்

கொழும்பு, ஓ. 12

கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதர்களை சந்திரிகா குமாரணதுங்கா நேற்று சந்தித்துப் பேசினார்.

எதிர்வரும் தேர்தலில் இடம்பெறக்கூடிய ஜனநாயக விரோதச் செயல்களை தூதர்களிடம் அவர் விளக்கிச் சொன்னார்.

முன்னணிக்கு தெளிவான வெற்றி கிடைப்பினும், சுமுகமாக ஆட்சியை மாற்றிக் கொள்ளாது, ஜனநாயக விரோதப் பாதையைக் கடைப்பிடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்ற தமது அச்சத்தை சந்திரிகா வெளிப்படுத்தினார். (இ-எ-6)

''நிரோமா'' இன்று வரும்

யாழ்ப்பாணம், ஓ. 12

திருகோணமலையில் இருந்து நேற்று மாலை புறப்பட இருந்த ''நிரோமா'' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் செல்வதற்காக யாழ் செயலகத்தில், ஆகஸ்ட் இரண்டாம் வாரத்துக்கும், ஆகஸ்ட் 12 ஆம், 16 ஆம் திகதிகளுக்கும் பெயர் பதிவு செய்தவர்களை இன்று காலை 8 மணிக்கு முன்னர் பருத்தித்துறை இறங்குதுறையில் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ-த)

தீவுப்பகுதிக்கு 400 பொலீஸார்

கொழும்பு, ஓ. 12

யாழ். மாவட்டம் தீவுப் பகுதிகளில் தேர்தலின் போது பாதுகாப்பு வழங்க 400 பொலீஸாரை அனுப்பவிருப்பதாக பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா தெரிவித்தார்.

அடுத்த 48 மணித்தியாலங்களில் தீவுப் பகுதிகளுக்கு பொலீஸாரை அனுப்புவது ஆரம்பமாகும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் கடமைகளை மேற்கொள்ளுவதற்காக நூற்றுக்கணக்கான அரச ஊழியர்களும் தீவுப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

யாழ். குடாநாட்டில் உள்ள அரச அதிபர் உட்பட முழு அரச ஊழியர்களும் தேர்தல் பணிகளை மேற்கொள்ள மறுத்துவிட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

2 துப்பாக்கிகளுடன் ஈ.பி.டி.பி. தலைவர்

கொழும்பு, ஓ. 12

இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளிலே ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே இரண்டு துப்பாக்கிகளை தமது உடையின் மறைவில் வைத்திருப்பதோடு கடுமையான மெய்ப்பாதுகாவலர்களுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகிறார். (இ-த)

காணாமற்போனோர் அமைப்பு பொ. ஐ. முன்னணிக்கு ஆதரவு

தென்பகுதி வன்செயல்களின் போது காணாமற் போனதாகக் கூறப்படும் 60 ஆயிரம் பேரின் உறவினர்கள் அமைத்துள்ள காணாமற்போனவர்களின் உறவினர்கள் அமைப்பு எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பது என்று தீர்மானித்துள்ளது.

இந்த அமைப்பின் கணிப்பின் படி காணாமற்போனவர்களின் உறவினர்களான சுமார் எட்டு லட்சம் பேர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே வாக்களிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனவர்களின் உறவினர்கள், தொடர்புடையவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை எட்டு லட்சம் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. [இ-எ-6]

மருத்துவபீட மாணவரின் போராட்டம் தொடர்கிறது

விஞ்ஞான பீடத்தினர் ஆதரவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓ. 12

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை மருத்துவ பீடத்தில் அனுமதிக்கக் கூடாது என்று கோரி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். இன்றும் அவர்கள் பகிஷ்கரிப்பு நடைபெறும். (ஒ-3)

ரணில் - சந்திரிகா டெலிவிஷனில் விவாதம்

கொழும்பு, ஓக. 12

டெலிவிஷன் விவாதம் ஒன்றுக்கு வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த சவாலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இத்தகவலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் ஒருவர் பி.பி.ஸி.யின் சிங்கள சேவைக்கு வெளியிட்டார். (இ-எ-6)

நல்லூரில் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஓ. 12

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை பத்து மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவ காலத்தில் அமைதி, சுகாதாரம், பாதுகாப்பு என்பனவற்றைப் பேணுவதில் மாநகர சபை, தமிழீழ காவல்துறை தொண்டர் சேவைகள் என்பன வழமை போல ஈடுபடும்.

ஆலயச் சூழலில் சமய, கலை நிகழ்வுகளும் வழமை போல் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. [அ-30-111-17]

பிரசாரக் கூட்டங்களில் சந்திரிகாவின் மேடையை சுற்றி வளைத்து பாதுகாப்பு!

கொழும்பு, ஓ. 12

சந்திரிகா பிரசாரக் கூட்டங்களில் பேசும் போது, தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைச் சேர்ந்த பாதுகாப்புப் பிரிவினர் மேடையைச் சுற்றி வளைத்து நிற்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான முன்னாள் பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திரிகாவுக்குப் பாதுகாப்பு வழங்க இராணுவக் கொமாண்டோக்களையும் அரசு வழங்கியுள்ளது. (ஒ-எ)

பொதுக்கல்வித் தேர்வு இன்றுமுதல் ஆரம்பம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் கடந்த இரண்டு வருடங்களாக நடத்தப்பட்டு வரும் தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் இவ்வாண்டிற்குரிய தேர்வு இன்று 12 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இவ்வாண்டு நடைபெறும் எழுத்துத் தேர்விற்கு தமிழீழம் முழுவதும் 15, 250 மாணவர்கள் தோற்றவுள்ளனர். 137 தேர்வு நிலையங்களில் இத்தேர்வு நடைபெறவுள்ளது.

சென்ற ஆண்டைப் போல மாவட்ட, தேசிய மட்டங்களில் உச்சப் புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இவ்வாண்டும் தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். (ஒ-க)

ஊர்திகளுக்கு வரி அட்டை: உடன் பெற்றுக்கொள்ளவும்!

போக்குவரத்துப் பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓ. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள மோட்டார் ஊர்திகளுக்கான 94 ஆம் ஆண்டுக்குரிய வரி அட்டை சம்பந்தப்பட்ட பகுதி உதவி அரச அதிபர் பிரிவுகளில் விசேடமாக இயங்கும் அலுவலகங்களில் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 94 ஆம் ஆண்டிற்கான வரி அட்டையைப் பெற்றுக்கொள்ளாத ஊர்தி உரிமையாளர்கள் இதற்கான காலஎல்லை எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் முடிவுறுவதால் இத்திகதிக்கு முன் 94 ஆம் ஆண்டு வரி அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். [ஒ]

சுவரொட்டிகள் ஒட்டுவதில்

தேர்தல் சட்டவிதிகளை மீறி அரசு செயற்படுகிறது

அவதானிகள் குழு கவலை

கொழும்பு, ஓக. 12

தேர்தல் சட்டவிதிகளை மீறி பிரதமர் மற்றும் அமைச்சர்களின் படங்களுடன் கூடிய சுவரொட்டிகள் தொடர்ந்து ஒட்டப்பட்டு வருவதாக சுதந்திர, நியாயமான நாடாளுமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைக் குழு கவலை தெரிவித்துள்ளது.

சட்டத்தை நிலைநாட்டும் பணியைப் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகள் இப்படியான தேர்தல் மீறல்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இக் குழு தமது தேர்தல் கால பிந்திய நிலைவரம் பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ)

அரசியல் காரணங்களுக்காக

இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸார் சுகயீன லீவில்

கொழும்பு, ஓக. 12

களுத்துறை மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினருக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றி விசாரணை நடத்திய ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸார் காரணமின்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் செய்த இம்முறைப்பாடுகள் பற்றி சம்பந்தப்பட்ட பொலிஸார் பாரபட்சமின்றி விசாரணை நடத்தி வந்தவர் என்று களுத்துறை மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பளீல் ஹாஜியார் தெரிவித்தார்.

இடமாற்றத்துக்குள்ளான மூன்று பொலிஸாரும் சுகயீன விடுமுறையில் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

தம்மைக் கொல்லச் சதி என்ற

சந்திரிகாவின் புகாரை ஈ.பி.டி.பி. மறுக்கிறது

கொழும்பு, ஓக. 12

தம்மைக் கொல்ல அரசு ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவை கூலிக்கு அமர்த்தியிருப்பதாக சந்திரிகா தெரிவித்த குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மறுத்தார்.

''ஜனநாயகச் சூழலை உருவாக்க விரும்பும் நாம் ஜனநாயகமுறையையே விரும்புகின்றோம். வன்முறைகளில் எமக்கு நம்பிக்கையில்லை. இக்குற்றச்சாட்டு அரசியல் ஆதாயம் கருதி எழுப்பப்பட்டுள்ளது.

''ஈ.பி.டி.பி. பலமான சக்தியாக வருவதை விரும்பாதவர்கள் இக் குற்றச்சாட்டை சுமத்துகின்றார்கள்'' என்று தேவானந்தா தெரிவித்தார்.

நாடு பிளவுபடுவதைத் தடுக்க

மகாசங்கத் தலையீட்டை கோருகிறார் ஜயசூரியா

கொழும்பு, ஓக. 12

முன்னைய காலத்தைப் போன்று நாடு பிளவுபடுவதைத் தடுத்து நிறுத்த பௌத்த மகாசங்கத்தினர் தலையிட்டு உதவ வேண்டும்.

சிங்கள மக்கள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவரான காமினி ஜயசூரிய இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் நாட்டினதும், சிங்கள இனத்தினதும், பௌத்த சமயத்தினதும் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாமென்று தென்பகுதியின் மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அறிவுறுத்துமாறும் மகாசங்கத்தினரை அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

வெங்காயம் இறக்குமதியாகும்

3 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தை வெளிநாடுகளில் இருந்து உடனடியாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவர் எம். ஏ. யாசீன் தெரிவித்தார்.

வெங்காயத்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை நீக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-எ-6)

அறிந்ததைச் சொல்லுங்கள்!
பதக்கத்தை வெல்லுங்கள்!!

தமிழீழத் தாயகத்தை
தெரிந்து வையுங்கள்

உங்கள் அறிவு
மேம்படுத்தலுக்கு
தமிழீழத்தைத்
தெரிந்து
கொள்ளுங்கள்
வினா விடைப்
போட்டி

ஒரு
பவுண்
தங்கப்
பதக்கம்
பரிசு

அன்பு மாணவர்களே!

உங்கள் அறிவினை வளமாக்கி
உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர் கந்தசட்டியை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 – 08 – 1994

விவரங்கள் கடந்த 07. 08 09ஆம் திகதி பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

[கி-8871]

படையினர் அட்டூழியம் தொடர்கிறது

வடமராட்சி கிழக்கில் மீனவர் தொழில் இன்றிப் பாதிப்பு!

தென்மராட்சி, ஓக. 12

படையினரின் அடாவடித்தனம் தொடர்வதால் வடமராட்சி கிழக்கில் மீன்பிடித் தொழில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் இரவு வேளைகளில் அடிக்கடி ரோந்து சேவையில் ஈடுபட்டு வரும் படையினர் மீனவர்கள் மீது தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இதனால் மீனவர்கள் கடற்பக்கம் தலைகாட்டவே அஞ்சுகின்றனர். இந்த நிலையால் அவர்கள் வருமானம் இன்றி கஷ்டமுறுகின்றனர்.

தொழிலுக்குச் சென்ற பலரின் மீன்பிடி உபகரணங்கள், படகுகள் படையினரால் சேதமாக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன. (ஒ-117)

யாழ்ப்பாணத்தில் கள்ள வோட்டுகளால் 10 ஆசனங்களைப் பிடிக்க அரசு திட்டம்

'யுக்திய' சிங்கள பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஓக. 12

யாழ். மாவட்டத்தில் இம்முறை தேர்தல் நடத்தி அதன் மூலம் ஈ.பி.டி.பி. இயக்கத்திற்கு 5 அல்லது 6 ஆசனங்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்திற்கு 2 ஆசனங்களையும், ஈரோஸ், முஸ்லீம் காங்கிரஸ் கட்சிக்கு 1 அல்லது 2 ஆசனங்களாக வழங்கிவிட அரசு முடிவு செய்துள்ளது.

யுக்திய சிங்களப் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 6 லட்சம் ஆகும். அதில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வசிக்கும் வாக்காளரின் எண்ணிக்கை 6 ஆயிரம் மட்டுமே.

யாழ். மாவட்டத்தில் 445 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆனால் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மொத்தம் 80 நிலையங்கள் மட்டுமே அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த 80 வாக்களிப்பு நிலையங்களிலும் எப்படியாவது 2 லட்சம் வாக்குகளை போட்டு யாழ். மாவட்டத்தில் இருந்து 10 உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்துவிட அரசு திட்டமிட்டுள்ளது என்றும் யுக்திய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

மேற்கு கடலோரப் பகுதிகளில்

கரும்புலி ஊடுருவலை தடுக்க கடற்படையினர் ரோந்து

கொழும்பு, ஓக. 12

புத்தளம் முதல் வத்தளை வரையான மேற்குக் கடலோரப் பகுதிகளில் கடற்படையினர் தீவிர ரோந்து நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலிகள் கொழும்பு நகரினுள் ஊடுருவாமல் பார்த்துக் கொள்ளவே இக்கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

தேர்தல் வன்செயல் தொடர்பான

சந்தேக நபர்களை ஒப்படைக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு வேண்டுகோள்

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ளது.

கொழும்பு, ஓக. 12

தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக தேடப்பட்டு வரும் சுமார் 300 கட்சித் தொண்டர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படி சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளை பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

இவர்களில் சில சந்தேக நபர்கள் கொலைகள், கடத்தல்கள் மற்றும் தீவைப்புச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை மதுபான நிலையங்கள் மற்றும் சாராயத் தவறணைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலால் ஆணையாளர் டபிள்யு. என். எப். சந்திரரட்ன இதனைத் தெரிவித்தார்.

இத்தடை உத்தரவை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

தீவுப்பகுதி மக்களுக்கு விசேட அடையாள அட்டை

கடற்படையினர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 12

தீவுப் பகுதியில் நிரந்தரமாக குடியிருப்போருக்கு அண்மையில் கடற்படையினர் விசேட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளனர்.

காரைநகர் பகுதிக்குள் அண்மையில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதன் பின்னரே கடற்படையினர் விசேட அடையாள அட்டைகளை விநியோகித்ததாகக் கூறப்படுகிறது.

தீவுப் பகுதிக்குள் புதிதாக எவரும் வருவதை கண்காணிப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார சேவை பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12

எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிமனையில் நடைபெற இருந்த வடபிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை தேர்தலை முன்னிட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெறுமென வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 4)

கடந்த 3 மாத காலத்தில்

ஆயிரத்து 715 பேர் நாயினால் கடியுண்டனர்

யாழ்ப்பாணம், ஓக 12

கடந்த மூன்று மாதகாலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் மொத்தம் ஆயிரத்து 715 பேர் நாயினால் கடியுண்டனர். இவர்களில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுகாதாரப் பகுதி புள்ளி விவரங்களில் இருந்து இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன. (ஐ- 4)

சமயகுரவர் காட்டிய நெறியில் சைவ மக்கள் வாழவேண்டும்

திருமுறை விழாவில் நல்லை ஆதீன முதல்வர்

கொழும்புத்துறை, ஓக 12

''சமயகுரவர்கள் அகத்திலும் புறத்திலும் ஒழுங்கான வாழ்வை மேற்கொண்டு புனிதம் அடைந்தார்கள். அவர்கள் காட்டிய நெறியில் சைவமக்களாகிய நாமும் வாழ வேண்டும்.''

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியன இணைந்து கடந்த 6 ஆம் திகதி நடத்திய சைவத் திருமுறைப் பெருவிழாவில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. பொ. சிவப்பிரகாசம் தலைமையில் விழா நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையில் மேலும் கூறியதாவது:

உலகிலே ஒவ்வொருவரும் நலமாக வாழ ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாதவை. [illegible] புறத்திலே மாத்திரம் பெற்றால் போதாது; அகத்திலேயும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.''

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், திரு. ஆறு. திருமுருகன், திரு. கா. கணேசதாசன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

விழா ஆரம்பத்தில் அந்தணப்பெரியார்கள், ஆன்மீகச் சீலர்கள், கூட்டு வழிபாடு — பஜனை நடத்திய மெய்த்தொண்டர்கள் ஆகியோர் சூழ்ந்துவர மங்கள இசையுடன் திருமுறை தந்த திருத்தொண்டர், ஆறுமுக நாவலர், யோகசுவாமிகள், விபுலானந்தர் ஆகியோரின் படங்கள் ரதபவனியாக பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடத்திய பின்பு விழா அரங்கிற்கு எடுத்துவரப்பட்டன.

இலவச சைவசமய வகுப் [illegible] பணிபுரிந்த திரு. கே. இராம [illegible] முகசுந்தரம், செல்வி தேவகி தியாகராசா ஆகியோருக்கு விழாவில் பாராட்டுப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

விழாவில் ஆசிரியை செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் மாணவிகளின் பண்ணிசை நிகழ்ச்சி, சங்கீத வித்துவான் திருமதி மிதிலா விவேகானந்தனின் தெய்வீக இசையரங்கம், ஆசிரியை செல்வி மைதிலி அம்பலவாணரின் மாணவிகளின் நாட்டிய நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

அடுத்த நாள் திரு. கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள். கொழும்புத்துறை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள், சங்கீத வித்துவான் திரு. எஸ். குமாரசாமியின் இலக்கிய இசையமுத நிகழ்வு, திரு. பா. தயாளன், திரு. கே. சோதிதாசன் ஆகியோரின் கவிதாலய நிகழ்ச்சி ஆகியனவும் இடம்பெற்றன. (க-17-30)

'றுகுணு' கப்பலில் முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களுக்கு 'றுகுணு' கப்பலில் பல லட்ச ரூபா பெறுமதி வாய்ந்த முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனை அடுத்து தபாலகங்களில் முத்திரைக்கு நிலவி வந்த தட்டுப்பாடு முற்றாக நீங்கியிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (எ-17)

திருக்குறள் மனனப் போட்டி நல்லியக்கச் சபை நடத்தும்

யாழ்ப்பாணம், ஓக. 12

காரைநகர் நல்லியக்கச் சபையினர், காரைநகரைச் சேர்ந்த ஆண்டு 5 வகுப்புக்கு உட்பட்ட மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

தமிழரின் வாழ்க்கை நூலாகிய திருக்குறளை சிறுவர்களின் மனதில் பதிக்கும் நோக்கில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ற்றன் கல்லூரியிலும் —

மறு நாள் 18 ஆம் திகதி காலை 8மணிக்கு யாழ். நாவலர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

போட்டியில் கலந்து கொள்வோர் அடுத்த மாதம் 9 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஐ.தே.கவுக்கு ஆதரவு கோரி படையினருக்குக் கடிதம்

கட்சி செயலர் அனுப்பினார்

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி ஆயுதப் படையினருக்கு ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதிக்கு கடந்த மூன்றாம் திகதி அனுப்பிய கடிதத்தில் அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

''பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கைகோத்து செயல்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் தொடர்பு நிலவுகிறது.

''விடுதலைப் புலிகளுக்கு திருப்தியளிக்கக் கூடியதாக வடக்கு - கிழக்கு மாகாண எல்லைகளை மீள்நிர்ணயஞ் செய்யப்போவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கூறியுள்ளது.

''இந்த நாட்டின் அரசியலில் இது ஒரு பயங்கர நிலவரத்தை தோற்றுவித்துள்ளது. எல்லை மீள் நிர்ணயம் என்பது இரண்டு மாகாணங்களை இணைத்து தமிழர் தாயகத்தை உருவாக்குவதுடன் நிற்கப்போவதில்லை. இது திகாமடுல்ல மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பெரும்பகுதியை கிழக்கு மாகாணத்துடன் இணைக்கவும் வழிவகுக்கும்.

''தாய்நாட்டுக்காக உயிரை தியாகஞ்செய்த படையினருக்கு நாம் வழங்கும் சன்மானமா இது? இதற்காகத்தானா எமது நாட்டை நாம் பாதுகாத்து வந்தோம்?

''நாட்டின் எதிர்காலம் படையினரின் கைகளில்தான் தங்கியுள்ளது. — இவ்வாறு அவர் தமது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

உதவிப்பணம்

தென்மராட்சி ஓக 12

பளை பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஜூலை, ஓகஸ்ட் மாத கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரிவு அஞ்சல் நிலையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. (உ—117)

தாதி பயிலுநர்க்கான வெற்றிடம்

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வில்லிஸ் பியர்ஸ் தாதியர் கல்லூரிக்கு பயிலுநர்க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இரண்டு தடவைக்கு மேற்படாது G C B. (O/L) சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் ஆகியவற்றில் 2 இல் திறமைச் சித்தி (C) பெற்றிருப்பவர்கள்.

வயது — 18 - 23 க்கு உட்பட்டவர்கள்

ஆவணி மாதம் 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் ரூபா 25/ க்குப் பெற்றுக் கொள்ளவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

PRINCIPAL,
SCHOOL OF NURSING
GREEN MEMORIAL HOSPITAL
MANIPAY.

[கி-8681]

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
12
—
12
—
1934

மறைவு:
20
—
08
—
1988

அமரர்

செல்லப்பா சின்னத்தம்பி

(மின்சார இயந்திர இயக்குநர்)

திதி: 12-08-1994

ஆறு ஆண்டு சென்றாலும் உங்களுடைய பண்பையும் செய்கைகளையும் மறக்க முடியாது என்றும் கலங்கிய கண்ணுடன் நிற்கும்.

அன்பு மனைவி,
சகோதரி, சகோதரர்கள்,
மச்சான், மருமக்கள்,
பேரமக்கள் மற்றும்
உறவினர்.

கடலைப்புலம் வேள்,
சுன்னாகம்.

(கி/5716)

உணவகங்கள், பந்தல்களில் சுத்தத்தைப் பேணுங்கள்!

மருத்துவப் பிரிவு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக 12

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்படவுள்ள உணவகங்கள் மற்றும் தண்ணீர்ப் பந்தல்களில் சுத்தம் பேணுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மருத்துவப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்—

உற்சவ காலத்தில் அங்கு தற்காலிகமாக வியாபார நோக்குடன் அமைக்கப்படும் சகல உணவகங்கள் ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள், மற்றும் சேவை அடிப்படையில் தாகசாந்தி வழங்கும் தொண்டர்கள் தொற்று நோய் பரவாது சகல மட்டத்திலும் சுத்தம் பேணுமாறும்—

கலப்படம் செய்யப்பட்ட அசுத்தமான நிலையில் தயாரிக்கப்பட்ட, காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டாமெனவும் எச்சரிக்கை விடுக்கிறோம்.

அதேசமயம் விபத்துக்கள் இடம் பெறாது பொதுமக்கள் திருவிழாக்காலத்தில் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் — வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ)

தேவாலய மேடையில் அரசியல் பேசாதீர்!

அதிமேற்றிராணியார் கோரிக்கை

கிறிஸ்தவ மதகுருமார் தேவாலயங்களில் உள்ள பிரசங்க மேடைகளையோ (Pulpit) அல்லது வேறு எந்த இடங்களையோ அரசியல் பேசுவதற்கு பயன்படுத்தக்கூடாது என்று கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வந்தனைக்குரிய டாக்டர் நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கேட்டுள்ளார்.

கத்தோலிக்க மதகுருமார்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் அவர் இந்த பணிப்புரையை விடுத்திருக்கிறார்.

தமது இந்த வேண்டுகோளை நாட்டில் உள்ள அனைத்துத் தேவாலயங்களிலும் விளக்கியவம் கொடுக்காமல் வாசிக்க வேண்டும் என்றும் அதிமேற்றிராணியார் பணித்திருக்கிறார்.

தமது செய்தியில் அவர் கூறியிருப்பதாவது:

வாழ்க்கையின் யதார்த்த நிலையை தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களை மதிக்கவேண்டும். இல்லாவிடில் நாம் சர்வாதிகாரம், வறுமை ஆகியவற்றுக்கே வழி வகுப்பவர்களாவோம்.

ஒரு கட்சிக்கு ஆதரவாக தேவாலய பிரசங்க மேடைகளையோ அல்லது வேறு அரங்குகளையோ மதகுருமார் என்ற முறையில் மதகுருமார்கள் பயன்படுத்தக் கூடாது.

ஒருவரின் வாக்களிக்கும் உரிமையை மற்றவர் மதிக்க வேண்டும் இது சிவில் சட்டத்தை மீறும் செயல் மட்டுமல்ல, கடவுளுக்கு எதிரான பாபச் செயலுமாகும். இவ்வாறு அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. [இ-எ]

தேர்தலுக்கு ஏற்ற சூழ்நிலை கிழக்குப் பகுதியில் இல்லை

அங்கு சென்ற வண பிதா தகவல்

கொழும்பு, ஓக. 12

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் நடத்தக்கூடிய சூழ்நிலை நிலவவில்லை என்று தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக நீதி மற்றும் சமாதானப் பணியகத்தைச் சேர்ந்த பணிப்பாளர் வண. பிதா ஒஸ்வால்ட் பேரல் தெரிவித்தார்.

அண்மையில் வண பிதா பேரல் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த போது இதனை அவருக்கு அங்குள்ளவர்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

மக்களின் இக்கூற்றில் உண்மையிருப்பதாக அவர் ஒப்புக்கொண்டார்.

சில்லாலை

புனித கதிரை மாதா திருவிழா

மேற்படி திருவிழா இம்மாதம் 14ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு திவ்வியநற்கருணை ஆராதனையும் 15ஆம் திகதி காலை 8-00 மணிக்கு திருவிழா திருப்பலியும் நிறைவேற்றப்படும்.

ஆலய சபை,
புனித கதிரை மாதா ஆலயம்.
சில்லாலை.
[32308]

உயர்திரு
முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி
அவர்களின்
9-ம் ஆண்டு
குருபூசை விழா

இன்று (12-08-1994) வெள்ளிக்கிழமை
செல்வச்சந்நிதியில் அமைந்திருக்கும் சந்நிதியான்
ஆச்சிரமத்தில் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.
வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையில் குருபூசை தினத்தையொட்டி
நடைபெற்ற
சைவ சமய அறிவுப் போட்டியில்
தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு
சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும்
ஞானபண்டித இயலரசு பண்டிதர்
திரு. க. முத்துவேலு ஆசிரியர் அவர்கள்
பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிப்பார்
தொடர்ந்து
மகேஸ்வர பூசை நடைபெறும்

அன்பர்கள், அடியார்கள் கலந்து அத்தினத்தை
சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி,
செ. மோகனதாஸ்.
[32834]

தமிழீழ மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி தேவை

மாணவர் அமைப்பு பொறுப்பாளர் உரை

ஏழாலை, ஓக.12

''இன்றைய மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கப்பட வேண்டும். தமிழ் ஈழத்தில் தொழில் முயற்சிகள் பெருக வேண்டும்.''

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட கல்வி ஊக்குவிப்பு வெகுமதி வழங்கும் வைபவத்தில் கருத்துக்கோவை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வலிகாமம் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. க. இளஞ்செழியன் இவ்வாறு கூறினார்.

அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு சங்கத்தலைவர் திரு. மு. திருநாவுக்கரசு தலைமை தாங்கினார்.

குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகா வித்தியாலயத்தில் 35 ஆண்டுகளுக்கு மேல் கல்வி கற்பித்து ஓய்வு பெற்ற முதுபெரும் ஆசிரியை திருமதி தனேஸ்வரி கணபதிப்பிள்ளை மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

திரு. இளஞ்செழியன் மேலும் பேசியதாவது:

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் யப்பானின் முன்னேற்றத்துக்கு தொழில் நுட்பக் கல்வியும் தொழில் முயற்சியும் எவ்வளவோ கைகொடுத்தன.

''முறைசார்ந்த கல்விக்கு நீங்கள் வெகுமதிகள் வழங்குவதோடு நின்றுவிடாமல் முறைசாராக் கல்வியில் முதிர்ச்சி அடைந்த மாணவர்களையும் கௌரவித்து அவர்களுக்கும் ஊக்குவிப்புப் பரிசுகளை வழங்க வேண்டும்.''

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா. சிவச்சந்திரன், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு ஆ. மகாதேவன், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. ஆ. சி. நடராசா, வலி. வடக்குப் பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு வ. சத்தியசீலன் ஆகியோர் கருத்துக் கோவை நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள்.

மருத்துவத்துறையில் யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான செல்வன் சோபிதா சிவசோதி, நிருபா அமிர்தரத்தினம், சட்டத்துறைக்குத் தெரிவான செல்வன் நிசாந்தன் சுவர்ணராசா, 1993 க. பொ. த சா/த பரீட்சையில் 6 பாடங்களில் அதிவிசேட சித்திகளைப் பெற்ற செல்வன் சசிகரன் காராளசிங்கம், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த செல்வி அர்ச்சனா பத்மநாதன் ஆகியோருக்கு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் வெகுமதிகளை வழங்கினார். (ச-15)

டெல்ஷான் டெலிவிஷனில்

தமிழர் தாயகம் குறித்து வாசு- நியதபாலா வாதம்

கொழும்பு, ஓக. 12

ஐ. தே. க. வேட்பாளர் ஜினதாஸ நியதபாலாவுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையே டெல்ஷான் டெலிவிஷன் நிறுவனம் நடத்திய பகிரங்க விவாதத்தில் 'தமிழரின் தாயகம்' பற்றிய பிரச்சினை காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

வாசுதேவ; வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஒரே வழி இரு மாகாணங்களையும் தனி நிர்வாக அலகாக இணைப்பது தான்.

நியதபாலா; இணைக்கும் யோசனை நாட்டைப் பல துண்டுகளாகச் சிதற வழி வகுக்கும்.

நாணயக்கார; ஜனநாயகம் என்பதன் அர்த்தம் பெரும்பான்மையினர் வாக்குச் சீட்டில் புள்ளடியிடுவது மட்டுமல்ல; சிறுபான்மையினரின் உரிமைகளை பெரும்பான்மையினர் பாதுகாப்பதும் தான். இதனை மொழி அல்லது இன அடிப்படையில் பிரதேச ரீதியாகச் செய்யவேண்டும், இன்று முழு உலகிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை இதுவாகும்.

எனது யோசனை சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

வடக்கு - கிழக்கில் இன விகிதாசாரத்தை மாற்றாத விதத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான நோக்கங்களில் இதுவும் ஒன்று.

வடக்கு - கிழக்கை தனி அலகாக்கி அம் மாகாண மக்களுக்கு சொந்த நிர்வாகம் வழங்கப்பட வேண்டும் என்பதே முன்னணியின் பிரதான நோக்கமாகும். ஒரு கலாசாரம் நிலவும் பகுதியில் இன விகிதாசாரத்தை மாற்றி [illegible] கூடியதாக வேறு இன குடியேற்றங்களை ஏற்படுத்தக்கூடாது.

தற்போதைய யுத்தத்தில் ஏழைகள் கொல்லப்படுகின்றார்கள் செல்வந்தர்கள் சொகுசாக வாழ்கின்றார்கள்.

நியதபாலா; நாணயக்காரவின் யோசனை நாட்டைப் பிளவுபடுத்தும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு அம்பாறைத் தொகுதியையும் சேர்த்து வடக்கு - கிழக்கை இணைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி திட்டமிட்டுள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

நாணயக்கார; யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒரேவழி தனி நிர்வாக அலகு ஒன்றை தமிழர் - முஸ்லிம்களுக்கு வழங்குவது தான்.

நியதபாலா; வாசுதேவாவின் யோசனை 74 சதவீத பெரும்பான்மை சிங்கள இனத்துக்கு செய்யும் முழு துரோகமாகும். சிங்களவருக்குத் துரோகம் செய்து வாக்குகளைப் பெறமுடியுமா என்பது சந்தேகமே. வெள்ளவத்தையில் தமிழர் வாழ்வது போல வடக்கு- கிழக்கு மக்கள் தெற்கில் வாழவும் உரிமை பெற்றுள்ளார்கள். (இ-எ)

அவசரநோயாளர் தனியார் வாகனங்களில்

தென்மராட்சி ஓக. 12

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளதால் அவசர நோயாளர்கள் தனியார் வாகனங்களில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் படுகின்றனர். (இ-117)

ஒட்டுப்பலகை கூட்டுத்தாபன

முன்னாள் தலைவர் மீது மோசடி வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஓக. 12

சுமார் 3½ கோடி ரூபா மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முகாமையாளருக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்யும்படி இரகசியப் பொலிஸாரை சட்டமா அதிபர் பணித்திருக்கிறார்.

முன்னாள் தலைவருக்கு எதிராக காலி நீதிவான் நீதிமன்றத்திலும் — பொது முகாமையாளருக்கு எதிராக மொறட்டுவை நீதிவான் நீதிமன்றத்திலும் வழக்குகளை இரகசியப் பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர். (எ-6)

பனை வளத்தை அதிகரிக்க 'கற்பகச்சோலை' திட்டம்

தமிழீழ பொருண்மியம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக 12

தமிழீழத்தில் இருக்கின்ற பனைமரத் தொகையை இரண்டாயிரம் ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன் ''கற்பகச்சோலை'' என்னும் பாரிய பனை நடுகைத் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளது. இதன் முதற்கட்ட முயற்சியாக ஐந்து வருடங்களில் 50 லட்சம் பனை விதைகள் நடப்படவுள்ளன.

ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபை போன்ற துறைசார் நிறுவனங்கள், கிராமிய உற்பத்திக் குழுக்கள், ப. நோ. கூ. சங்கங்கள், பாடசாலைகள், புனர்வாழ்வுக் கழகங்கள், சாரணர் குழுக்கள், மற்றும் பொது ஸ்தாபனங்கள், ஆர்வமுள்ள பொதுமக்கள் ஆகியோர் ஊடாக இப்பனை நடுகைத் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் நடைமுறைப்படுத்த உள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக பனை நடுகை முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளது. 1991 இல் 15 ஆயிரம் பனை விதைகளும், 1992 இல் 15 ஆயிரத்து 700 பனை விதைகளும், 1993 இல் 346 000 பனை விதைகளும் நடப்பட்டன இவற்றில் பெரும்பாலானவை வீதி ஓரங்கள், மைதான ஓரங்கள். போன்ற பொது இடங்களிலேயே நடப்பட்டன. கற்பகச்சோலை திட்டத்தின் கீழ் பெரும்பாலான விதைகள் பனந் தோட்டங்களாகவும், மாதிரிப் பண்ணைகளாகவும் நடப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட உள்ளன.

நல்லூரில் இசைப் பேருரை

யாழ்ப்பாணம், ஓக 12

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஆதரவில் உற்சவ நாட்களில் தினமும் மாலை 5-30 மணிக்கு தெய்வீக அருள் இசைப் பேருரை இடம் பெறவுள்ளது.

''சம்பூர்ண ராமாயணம்'' என்ற தலைப்பில் கானசுதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா இசைப் பேருரையாற்றுவார்.

நல்லூர் [illegible] வீதியில் [illegible] ஆலயத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெறும். (ஐ)

நல்லூர் கந்தசுவாமி கோயில்
மகோற்சவத்தை
முன்னிட்டு
யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை
நடத்தும்
இந்து சமய வினா-விடைப் போட்டி

இளவயதினர் மத்தியில் இந்து சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் இப்போட்டியில் (போட்டி முடிவு திகதியன்று 19வயதிற்குட்பட்ட) சகலரும் பங்குபற்றலாம். (மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் மூலமும் ஏனையோர் தங்கள் பகுதி கிராம அலுவலர்கள் மூலமும் வயதினை உறுதிப்படுத்துவித்தல் வேண்டும்)

கீழே உள்ள வினாப்படிவத்தை நிரப்பி ரூபா 10/-ஐப் பணமாக அல்லது தபால் கட்டளையாகப் படிவத்துடன் சேர்த்து இம்மாதம் 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் நல்லை ஆதீனத்தில் உள்ள பேரவையின் தலைமை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செயலாளர் யாழ். இந்து சமயப் பேரவை நல்லை ஆதீனம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும் படிவத்தையே பயன்படுத்தல் வேண்டும்.

1ஆம் பரிசு — தங்கப்பதக்கம்
2ஆம் பரிசு — வெள்ளிப்பதக்கம்
3ஆம் பரிசு — ரூபா 500/-

மேலும் ஐவருக்கு ஆறுதல்பரிசுகள் வழங்கப்படும்
● பரிசளிப்பு விழா பற்றி பின்னர் அறிவிக்கப்படும்

வினாப் படிவம்

01. புராதன நல்லூர் கந்தசுவாமி கோயில் யாரால் கட்டப்பட்டது? ....
02. ஈழத்தில் ஆடி அமாவாசை கண்டகி சமுத்திர தீர்த்தம் சிறப்பாக நடைபெறும் ஆலயம் எது? கண்டகி என்றால் என்ன? ....
03 மகிடாசுரவதமும் விபாக்கிராசுரவதமும் நிகழும் ஆலயம் எது? ....
04. சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் நடத்திய சைவசித்தாந்த மங்கையர் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய ஈழத்து முதற்பெண்மணி யார்? அது எங்கு நடைபெற்றது? எந்த நாட்டில்? ....
05. ''ஆணை நமதே'' என தேவாரங்களில் எத்தனை முறை வருகின்றது? தேவாரத் தொடக்கத்தையும் தலங்களையும் குறிப்பிடுக? ....
06. 25 மகேசுர மூர்த்தங்கள் யாழ்ப்பாணத்தில் எங்கே ஓவியமாகக் காணப்படுகின்றன? ....
07. கந்தபுராணத்தில் முருகப்பிரான் சிவபூசை எத்தனை தடவைகள் ஆற்றியுள்ளார்? ....
08. நமசிவாய மந்திரம் நடுநாயகமாக எந்த வேதத்தில் வருகிறது? எப்பகுதியில்? ....
09. கீரிமலை புனிதத் தீர்த்தத்தின் சிறப்புப் பெயர் யாது? ....
10. ஈழத்தில் சோழ இளவரசியால் கட்டப்பட்ட ஆலயம் எது? ....
11. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவச்சிலை நல்லூரில் எந்த ஆண்டில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டது? ....
12. பஞ்சாக்கரப் பதிகத்திற்கும் நமச்சிவாயப் பதிகத்திற்கும் வேறுபாடு யாது? நமச்சிவாயப் பதிகம் எத்தனை? ....
13 இறந்தோர் அனைவரினதும் மேன்நிலை கருதிப் பிதிர்தர்ப்பணம் செய்பவர் யார்? ....
14 அஷ்டப்பிரகரணம் என்று கூறப்படும் நூல்கள் எவை? ....
15 யாழ். பல்கலைக்கழகம் முதன் முதல் யாருக்கு சித்தாந்த வித்தகர் என்னும் பட்டத்தை வழங்கியது? ....
16. ஈழத்துத் தவமுனிவர் ஒருவரால் சிதம்பரத்தில் அவர் பெயரால் அமைக்கப்பட்ட குளத்தின் பெயர் யாது? அவர் ஈழத்தை விட்டுச் சென்றது ஏன்? ....
17. பஞ்சபாண்டவர் ஒவ்வொருவரும் கையிற் கொண்டிருந்த சங்குகளின் பெயர் என்ன? ....
18. 'தேவாரம் வேதசாரம்' என்னும் நூலை எழுதியவர் யார்? ....
19. அஷ்ட கஜங்கள் எவை? ....
20. யாழ்ப்பாணத்திலுள்ள இந்து சமய சங்கங்கள், கோயில்கள், சைவசமயிகள் ஒன்றிணைந்த கூட்ட அமைப்பின் பெயர் யாது? ஆரம்பித்த திகதி யாது? ....
21 தேவாரங்களுக்கு நாயன்மார்கள் வழங்கிய பெயர்கள் ஆறு கூறுக? ....
22. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது? எந்த ஆண்டில்? ....
23. சிரஞ்சீவிகள் எண்மர் யார்? ....
24. திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடி வணங்கிய தனியடியார்கள் எத்தனை பேர்? ....
25. சரப மூர்த்தி தோற்றம் வரக் காரணம் யாது? ....

பெயர்:
விலாசம்:
வயது:
விண்ணப்பதாரர் 19 வயதுக்கு உட்பட்டவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.
இவரது பிறந்த திகதி:
பாடசாலை அதிபர்/கிராம சேவை அலுவலர்
[சி-8870]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நேரம் இரண்டரை போத்தல் பால் கொடுக்கும் சனல் ஆடும், கடா குட்டியும், பாலுடன் சினை சனல் ஆடும், குட்டியும், பத்து மாதங்கள் நிரம்பிய பெண் அல்சேஷன் நாயும் விற்பனைக்குண்டு. A. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32324)

முட்டையிட ஆரம்பித்துள்ள கறுப்பு பாமாஸ், வெள்ளை பாமாஸ், யாவோ பன்டம், பன்டம் கோழிகள் விற்பனைக்குண்டு. இல. 1, தவக்குமார் வீதி, [தாபிக்கு அருகில்], மடத்தடி, சமித்தாளை சாவகச்சேரி. [32341]

"சிவாளி"

சிவாளி நாதஸ்வர நறுக்கு திருவாவடுதுறை நாதஸ்வர நறுக்கு (சிவாளி) விற்பனையாகிறது. கிடைக்குமிடம்; கமலேஸ்வரி களஞ்சியம், 119/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [32337]

இணைமணி மாலை

வெண்பா கட்டளைக் கலித்துறை நூறு செய்யுள் நல்லூர் ஆதீனத்திலும் மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் கிடைக்கும். தனிப் பிரதி விலை ரூபா 25/- [7296]

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

சேவல் குஞ்சு விற்பனை

ஒரு கிழமை வளர்ச்சி அடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் மற்றும் மூன்று நாள் சோங்டன் கொமட் சேவல் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மகிவிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (32316)

காவேரி சீயாக்காய்

ஆறுவிதமான இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கவும். (32231)

மாணவர்களுக்கு

கல்வி உளவியல் கருத்துக்கள் கலை இலக்கிய கோட்பாடுகள் - உளவியலும் நவீன சிந்தித்தலும் ஆக்கம்; கலாநிதி சபா. ஜெபராஜா விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8850)

தவறிவிட்டது

9-8-94 இரவு இருபாலை சந்திக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் வாட்டர் பம்ப் சாமான்கள் அடங்கிய பாக் (Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விநாயகர் ஸ்ரோர்ஸ், புத்தூர் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் [32333]

மீனவர் இருவரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 12

அராலி கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் கடந்த 7ஆம் திகதியில் இருந்து காணாமற் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை, தம்பாட்டியில் இருந்து இடம் பெயர்ந்து நவாலி பயூன் குடியிருப்பில் வசிக்கும் நாகமணி தியாகராசா [வயது 55] அவர் மகன் தியாகராசா தியாகுமார் [வயது 21] ஆகிய இருவருமே காணாமற்போனவர்களாவர்.

இவர்கள் தொழிலுக்குச் சென்ற கடந்த 7ஆம் திகதி இராணுவத்தினர் கடற்பகுதியில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகக் கூறப்படுகிறது. (ஒ 15)

விதை உருளைக்கிழங்கிற்கான முற்பணம் அறவிடுதல்

1994 / 95 கால போகத்திற்கான விதை உருளைக் கிழங்கிற்கு விண்ணப்பித்தவர்கள் 10-08-94 தொடக்கம் 31-08-94 வரை தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைந்துள்ள "பசுமை வேளாண் சேவை" நிலையங்களில் பின்வரும் அடிப்படையில் விதை உருளைக்கிழங்கிற்கான முற்பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. ஐந்து பெட்டிகளிற்கு குறைவாக விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பித்த அளவுக்கும், ஐந்து பெட்டிகளுக்கு மேல் விண்ணப்பித்தவர்கள் 5 பெட்டிகளுக்கும் முற்பணம் செலுத்தல் வேண்டும்.
2. முற்பணம் ஒரு பெட்டிக்கு 3,500/- என்ற விகிதத்தில் அறவிடப்படும்.

குறிப்பு:
31-08-94ஆம் திகதிக்குப் பின்னர் முற்பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது;

பசுமை வேளாண் சேவை

(சி-8865)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்:
05 — 06 — 1924

இறைவன் அடியில்:
13 — 07 — 1994

அமரர் வேலாயுதர் அருளம்பலம்

பிள்ளைகள் மேல் கொண்ட பாசம்
பொய்யானதில்லை அப்பா
இணுவையூர் பிறந்த மண்ணின் பாசம்
பொய்யானதில்லை அப்பா
மண்ணின் சோகம் மழைத்துளியாய்
மக்களின் சோகம் கண்ணீர் துளியாய்
இந்த மாநிலமே கலங்குது அப்பா
உங்கள் பிரிவை சொல்லியழ
பிள்ளைகள் இதயம் தாங்கவில்லையே

இறைவா உன்னை நான் அறிவேன்
என் உற்ற தோழனாக
என் வாழ்வின் வழிகாட்டியாக
ஒளிவெள்ளத்தில் மலர்ந்த தாமரைபோல்
என் வாழ்வு மலர்ந்தது ஐயா
பூவில் இருந்து தேனை
என் வாழ்வில் சுவைத்தேன் ஐயா
அது என் பாக்கியமாக
எனக்கு அளித்த இறைவா
ஏன் இந்த சோகம் ஐயா
ஆனாலும் அவர் பிரிவை
என் இதயம் தாங்கவில்லையே!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(7592)

ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
27 — 07 — 1928

மறைவு:
24 — 07 — 1993

திருமதி அன்னலட்சுமி தம்பிராசா

(கல்வயல், சாவகச்சேரி)

திதி: ஷஷ்டி 12-8-1994

குடும்பத்தின் ஒளிவிளக்காய் கல்வயலின் குணமகளாய்
பண்புமிகு அன்னையாய் பாசமிகு தெய்வமாய்
அறுபத்திநான்கு ஆண்டுகள் வாழ்ந்தீர்
சாவுக்கொரு சாட்டு என்பதற்கு இணங்க
இடையில் வந்ததே கொடிய நோய்
நீர் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு ஆனாலும்
அகலாது நினைவுகள்.
உம் ஆத்ம சாந்திக்கு எமது கண்ணீர்ப் பூக்கள்!

உங்கள் பிரிவால் வாடும்,
அன்புக் கணவன் த. தம்பிராசா,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மாசிவன்,
நீர்வேலி.

(32265)

மாவட்ட ரீதியான அதிகாரப் பரவல்

தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஓக. 12

மாவட்ட ரீதியில் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெற வேண்டும்; மாகாண ரீதியில் அல்ல.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா முன்கண்டவாறு கூறினார்.

மாவட்ட ரீதியிலான அதிகாரப் பரவலாக்கல் நாட்டின் இறைமையை பாதிக்காது. மாகாணசபை முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-ஈ)

நாட்டின் ஆட்சி மாற்றம் உதவிகளைப் பாதிக்காது

வெளிநாட்டு ராஜதந்திரிகள் உறுதி

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து ஆட்சியில் ஏற்படும் மாற்றம் காரணமாக வெளிநாட்டு உதவிகள் ரத்துச் செய்யப்படமாட்டா என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் உறுதியளித்துள்ளனர்.

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழங்கப்படும் உதவிகளையும் சம்பந்தப்பட்ட வெளிநாடுகள் குறைக்கமாட்டா என்றும் இந்த ராஜதந்திரிகள் கொழும்பில் உள்ள அரச அதிகாரிகளுக்குத் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளனர்.

உலகவங்கி மற்றும் சர்வதேச நாணயச்சபை ஆகியனவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி புதிய அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் தொடர்ந்து உதவும் என்றும் அரசு அதிகாரிகள் கூறினர்.

முதல் முடிவு நள்ளிரவில்!

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் பொதுத் தேர்தலின் முதலாவது முடிவு 16ஆம் திகதி இரவு 11 மணியளவில் வெளியாகலாம்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா இத்தகவலை சண்டே ஒப்சேர்வருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். (உ-எ)

பூநகரியில் மடிந்த மகனுக்கு தாயின் கண்ணீர் பாடல்கள்

தென்பகுதியில் ஒலிப்பதிவு நாடா

கொழும்பு ஓக. 12

1992ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் திகதி பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் ஒருவரான லெப்டினன்ட் சஞ்சீவா அத்தனாயக்காவின் நினைவாக "போர் முனையில் இருந்து கண்ணீர்" — என்ற தலைப்பில் இசை நாடா ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மகனின் நினைவாக அவரது தாயாரான பிரபல சிங்களப் பாடகி சுஜாதா அத்தனாயக்கா பாடிய பாடல்களே இந்த நாடாவில் இடம்பெற்றுள்ளன.

"இது ஒரு பயனற்ற யுத்தம். இதில் சண்டையிட்டு உயிரை வீணாக இழக்காதே இராணுவத்தில் இருந்து விலகிவிடு" — என்று தந்தை கூறியதற்கு லெப்டினன்ட் அத்தனாயக்கா — ஜெனரல் கொப்பேகடுவ இருக்கும் வரை கவலைப் படத்தேவையில்லை" — என்று பதிலளித்தார்.

கொப்பேகடுவ கொல்லப்பட்ட பிறகு, லெப்டினன்ட் அத்தனாயக்கா இராணுவத்தில் இருந்து விலக முன்வந்த சமயம் 1992 பூநகரி தாக்குதல் வந்தது. அதில் லெப்டினன்ட் அத்தனாயக்கா கொல்லப்பட்டார்.

இவ் விவரங்களைத் தெரிவித்த சுஜாதா அத்தனாயக்கா "இந்த யுத்தத்தில் எத்தனை இளம் உயிர்கள் பலியாகின்றன. புதல்வர்களை இழந்து தாய்மார்கள் ஒருபுறம் கதற, இன்னொரு பக்கம் அரசாங்கம் தமாஷாக்களை நடத்தி வருகிறது. உயிரைப் பணயம் வைத்து சண்டையிடும் இளைஞர்களுக்காக அரசு என்ன தியாகம் செய்துள்ளது?"—

எனது வேதனையை இந்த இசை நாடாவில் படித்துள்ளேன்" — என்றார் சுஜாதா. (ஐ-எ)

சம்பள உயர்வு கோரி

தெற்கில் உப்பள ஊழியர்கள் சட்டப்படி வேலை இயக்கம்

கொழும்பு, ஓக. 12

லங்கா உப்பு நிறுவனத்தின் அம்பாந்தோட்டை, மிகுந்தலை, பலட்டுப்பான ஆகிய உப்பளங்களின் ஊழியர்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பள உயர்வு கோரியே இத்தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இந்த உப்பளங்களில் உப்பைச் சேகரித்து விநியோகிக்கும் பணி முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

வன்னியில் கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சை

முல்லை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இத்திட்டத்தின் மூலம் வாரத்தில் இரண்டு முறை கால்நடை சுகாதார சேவை நிலையங்களை மிருக வைத்தியர் மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையின் முதற் கட்டமாக கடந்த மாதத்தில் பல கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டதோடு 17 பண்ணையாளர்களின் கோழிகளுக்கு மருந்தும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ஐ)

பொறிவெடியில் சிக்கிப் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 12

வயலுக்கு காவலுக்குச் சென்றவர் மிருகவேட்டைக்காக தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த பொறிவெடியில் சிக்கிக்கொண்டதால் படுகாயமடைந்தார்.

உருத்திரபுரம் சிவநகரில் கடந்த செவ்வாய் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கணேசமூர்த்தி (வயது 37) என்பவரே படு[illegible]மடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் [illegible]ளார். (ஒ-15)

விபத்தில் இளைஞர் பலி!

உடைந்த கட்டடத்தின் கற்களை டிராக்டரில் ஏற்றிக்கொண்டு சென்ற இளைஞர் ஒருவர் பெட்டியிலிருந்து விழுந்து பலத்த காயங்களுடன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

பருத்தித்துறை தும்பளை கிழக்கைச் சேர்ந்த ராசலிங்கம் மனோகரன் (16 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கடந்த திங்கள் மாலை பருத்தித்துறை பிரதான வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மரண விசாரணையை உடுப்பிட்டி பதில் மரண விசாரணை அதிகாரி திரு வி. நடராசா நடத்தி விபத்துமரணம் எனத் தீர்ப்பளித்தார். [ஓ-173]

ST. JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE IN COMPUTER STUDIES

எமது புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- ✻ GW. BASIC
  ஆரம்பம் 13-08-94 மாலை 4.30 மணி
- ✻ TURBO PASCAL
  ஆரம்பம் 13-08-94 காலை 9.00 மணி
  (பல்கலைக்கழகம் செல்லும் பௌதிக விஞ்ஞான, பொறியியல் மாணவர்களுக்கு சிறந்தது)
- ✻ d BASE III^{+}

மேலதிக விபரங்களுக்கு
— Registrar

[சி-8867]

இரசாயன ஆசிரியர் கலந்துரையாடல்

இடம்: யாழ். மத்தியகல்லூரி
காலம்: 15 - 08 - 1994 திங்கள் காலை 9மணி
விடயம்: 1994 A/L இரசாயன பாட வினாத்தாள் பற்றிய கலந்துரையாடல்

இணைச் செயலாளர்கள்,
இரசாயன ஆசிரியர் கழகம்,

[32342]

D. M. I. DANIEL MEMORIAL INSTITUTE

233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்தி அருகில்)

A/L 96

ஆரம்பம்: 1994 08 13
சனிக்கிழமை பிற்பகல் 2மணி

கணக்கியல் — D. SAM
வர்த்தகம் — B பசில்
அளவையியல் — S சோதிலிங்கம்

[32332]

யாழ் றோட்டறிக் கழகம்

வறியோருக்கான

கண் சத்திரசிகிச்சை முகாம் - 4

நோயாளர்களைத் தெரிவுசெய்வதற்கான ஆரம்பப் பரிசோதனை

எதிர்வரும் ஞாயிறு 14-08-94 காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

இடம்: இணுவில்

★ கற்றறக் [Cataract] எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள நோயாளர்கள் காலை 7-30 மணிக்குமுன் வைத்தியசாலைக்குச் சமுகமளிக்கவும்.

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 8856]

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

இமெல்டா பொன்றோஸ் டோமினிக்

மண்ணுலகில் மலர்ந்த நாள்: 15-05-1933
விண்ணகு விரைந்த நாள்: 13-08-1989

இல்லத்தரசியாய் இங்கே நீ இருக்கையிலே இல்லாத தொன்றுமில்லை எங்களுக்கு. இன்றோ நீ ஓய்வெடுத்துக் கொண்டதனால், ஐயோ, ஒன்றுமேயில்லை எமக்கு. இது விதியோ எமன் செய்த பெரும் சதியோ சொல் [illegible] சொல்லொணா துயர் தந்து சென்றனையோ நீ.

13-8-1994 காலை 6.30 மணிக்கு பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், திருப்பலியில் பங்குபற்றி அவரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்க அன்போடு அழைக்கின்றோம்.

இவர் பிரிவால் வாடும்,
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"றோசி கொட்ஜ்"
32, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(32250)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஊரடங்கின் உள்நோக்கம்

எதிர்வரும் பதினாறாம் திகதி பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிந்ததும் மாலை ஆறு மணிக்கே ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

இந்த உத்தேச முடிவுக்கு எதிரணியினர் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர். ஊரடங்குச் சட்டத்தை, உத்தரவைப் பயன்படுத்தி அரசாங்கம் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பு உண்டு என்று அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

தேர்தல் வாக்களிப்பு காலை ஏழு மணிக்கு ஆரம்பித்து மாலை நாலு மணிக்கு முடிவடையும். அதன் பின்னர் வாக்குப்பெட்டிகளை வாக்கு எண்ணப்படும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும் பணியும், வாக்குகளை எண்ணும் பணியும் நடைபெறும்.

வாக்கு எண்ணும் நிலையத்தில் இருந்து தொலைவில் உள்ள வாக்களிப்பு நிலையங்களிலிருந்து வாக்குப்பெட்டிகள் அனேகமாக இரவு ஏழு மணிக்குப் பின்னரே வந்து சேரும். இதற்கு முன்பதாக ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவது தேர்தல் பணிகளுக்குக் குந்தகமாக அமையும் என்பதோடு, தேர்தல் முறைகேடுகளுக்குத் துணை போவதுமாகும்.

வாக்களிப்பு முடிந்ததும் வன்செயல்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காகவே ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய உத்தேசித்திருப்பதாக அரசு காரணம் காட்டக்கூடும். அதே ஊரடங்கைப் பயன்படுத்தி அரசாங்கமே — ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களே — வன்செயல்களில் ஈடுபடுவார்கள் என்ற மற்றப் பக்கத்தையும் நோக்காமல் இருக்க முடியாது.

இம்முறை தேர்தல் முறைகேடுகளும், தேர்தல் வன்செயல்களும் தாராளமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாக்களிப்புக்குப் பிந்திய ஊரடங்கு அமுல் கட்சிகளின் ஆதரவாளர் மோதிக் கொள்வதைத் தடுத்து வன்செயல்களைக் குறைக்க உதவும் என்பதனைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் அரசாங்க அதிகாரிகள், ஆளுங்கட்சி ஆதரவாளர்கள், பாதுகாப்புப் படையினர் என்போர் ஊரடங்கு உத்தரவைத் தமது கையில் எடுத்துக் கொண்டு தேர்தல் முறைகேடுகள், தேர்தல் வன்செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இதுவரையில் இடம்பெற்ற தேர்தல் வன்செயல்கள், அசம்பாவிதங்களில் பெரும்பாலானவை ஆளுங்கட்சியினரின் கைவண்ணமாக உள்ளதையே அவதானிக்க முடிகிறது. இம்முறை தேர்தல் முடிவுகளும் ஆளுங்கட்சிக்கு பாதகமாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில், தேர்தல் பணிகள் சரிவர முடிவடையுமுன்னர் ஆறு மணியோடு ஊரடங்கு நடைமுறைக்கு வரும் என்பது எவர் மனதிலும் சந்தேகத்தையே உண்டாக்கும்.

எனவே தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்களைத் தடுக்க வேண்டும் என்பதிலேயே அரசு உண்மையான அக்கறை கொண்டிருப்பின் வாக்குகள் எண்ணத் தொடங்கிய பின்னரும் முடிவுகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படும் நேரத்திற்கும் இடைப்பட்ட வேளையில் — இரவு 9 மணியிலிருந்து — ஊரடங்கு உத்தரவை அமுல் செய்யலாம்.

அவ்வாறு செய்வதால் தேர்தல் முறைகேடுகளை அரசு தூண்டும் என்று எதிரணியினர் முறைப்பட இடமிருக்காது —

தேர்தல் வன்செயல்கள் முறைகேடுகளைத் தடுப்பதிலும், தவிர்ப்பதிலும் அரசு — ஆளுங்கட்சி — முன்னுதாரணமாக விளங்குமா என்பதே தெற்கில் எழும் கேள்வியாகும்.

வடக்கு- கிழக்கு மாகாணம்

தமிழரின் தாயகம் என்ற நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை

பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா அறிவிப்பு

கொழும்பு, ஓக. 12

இந்த நாட்டில் தமிழருக்கு என தாயகம் ஒன்று உண்டு என்பதை சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு அக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''சந்திரிகாவைக் கொலை செய்ய ஈ. பி. டி. பி முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறீர்களா?'' — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''அப்படி நாம் நேரடியாகக் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால் சந்தேகம் அவர்கள் மீதுதான்'' — என்று அவர் தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி. சட்டபூர்வமான அரசியல் கட்சி என்று சுட்டிக்காட்டப்பட்டபோது,

''ஆம். மிரட்டல்களைப் பயன்படுத்தி அக் கட்சி போட்டியிடுகின்றது'' — என்று அவர் பதிலளித்தார்.

கேள்வி: பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றியீட்டும் பட்சத்தில் ஈ.பி.டி.பியிடம் இருந்து ஆயுதங்களைக் களைவீர்களா?

தர்மசிறி: நாங்கள் அதைச் செய்யவேண்டும். ஈ. பி. டி. பியிடம் இருந்து மட்டுமல்ல, அனைத்து ஆயுதக்குழுக்களிடமிருந்தும் முன்னாள் எம். பிக்களிடமிருந்தும் கூட ஆயுதங்களைக் களைவோம்.

கேள்வி: விடுதலைப்புலிகளிடமிருந்தும் ஆயுதங்களைக் களைவீர்களா?

தர்மசிறி: முயற்சிப்போம்.

தர்மசிறி: தமிழருக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அவர்களுக்கு என ஒரு தாயகப்பகுதி என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. வாசுதேவ நாணயக்காரா கூறியதை திரித்துச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

(எ)

அடிப்படை உரிமை மீறல் வழக்கு:

வயோதிப் விவசாயிக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

66 வயது விவசாயி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் மனுதாரருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கும்படி இரு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

தாம் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது காரணமின்றி பொலிஸார் தம்மைக் கைது செய்து அவமானப்படுத்தினார்கள் என்றும்—

இது தமது அடிப்படை உரிமையை மீறிய செயல் என்றும் மனுதாரர் தமது மனுவில் கூறியிருந்தார்.

மனுவை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில்— மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

அவரைக் கைது செய்து துன்புறுத்திய மொறவசேனஹ பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட், கான்ஸ்டபிள் ஆகிய இருவரும் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

(ஒ-எ-6)

ஆயுதக் குழுவான

ஈ. பி. டி.பிபற்றிய கேள்விக்கு பதிலளிக்க பிரதமர் மறுப்பு!

கொழும்பு, ஓக. 12

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பேசினார்.

தேர்தல் நடைபெறும் இச் சமயத்தில் ஆயுதம் தரித்த ஈ. பி. டி. பி. குழு கொழும்பில் தங்கியுள்ளதே என்று செய்தியாளர் கேட்டதற்கு பிரதமர் பதில் ஏதும் அளிக்கவில்லை.

''விடுதலைப் புலிகளிடம் இருந்து ஏதாவது சலுகைகள் உங்களுக்குக் கிடைத்ததா''? என்ற கேள்விக்கு,

பிரதமர் ''இல்லை''— என்று பதிலளித்தார். (எ)

நல்லை ஆதீனத்தில் சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இம்முறையும் வழமை போன்ற சமய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை திருமுறை வீதி. பஜனை, பயிற்சி ஆசிரியர்களுக்கான சமயப் பயிற்சி வகுப்பு, சமய தீட்சை, சமயப் பேருரை புராணப் படிப்பு, இசைப் பேருரை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். விசேஷ உற்சவ நாட்களில் ஆதீன கலா மண்டபத்தில் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ)

புலிகளின் குரல் வானொலியில்

12-08 — 1994

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி— நிகழ்ச்சியில் முதலில் நாம் அறிமுகம் அறிமுகமாவது — 'அக்கரைச் சீமையில்'' நாவல். அடுத்து சிறுகதை — ''அன்னதானம்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ''சிந்தை தெளிந்திடச் செய்திடுவோம்''

★ 8-25 — கணப்பொழுது

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம் லெனினின் மார்க்சியமும் யெல்ட்சினின் மாபியாவும்

★ 8-50 — வாத்தியகானங்கள்

13-08 — 1994

சனி காலை

★ 7-02— மாவீரவணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

எவரெஸ்டின் உயரம் ஆறு அடியால் குறைவு

சீன நிபுணர்கள் தகவல்

பீஜிங், ஓக. 12

இமயமலைத் தொடரில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 6 அடிகளினால் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

17 ஆண்டுகளுக்கு முன்பு - 1975 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 29 ஆயிரத்து 29 அடிகளாக இருந்தது என்று கணக்கிடப்பட்டதாகவும் — 1992 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அளவீட்டின்படி இச் சிகரத்தின் உயரம் 29 ஆயிரத்து 23 அடிகள் என்று காணப்பட்டதாகவும் ஷின்ஹுவா செய்தி ஏஜன்ஸி சீன அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி அறிவித்திருக்கிறது.

எவரெஸ்ட் சிகரத்தை அளப்பதற்கு சீன நிபுணர்கள் மிகவும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீன அதிகாரிகளின் இந்த அறிவிப்புக் குறித்து சில ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். அவர்களின் கருத்துப்படி — சீனாவுக்கும் நேபாளத்துக்கும் இடையில் உள்ள எவரெஸ்ட் சிகரம் ஆண்டு தோறும் 1,45 அங்குலத்தினால் உயர்ந்து வருவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. (எ)

ஜனாதிபதிக்கு அடுத்து

ஆகக்கூடிய பாதுகாப்பு சந்திரிகாவுக்கே உண்டு!

ஐ. தே. க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அடுத்த ஆகக் கூடுதலான பாதுகாப்பு சந்திரிகாவுக்கே கொடுக்கப்பட்டிருப்பதாக ஆளும் ஐ. தே. க விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகாவைக் கொல்ல ஆயுதக் குழு ஒன்று முயற்சிப்பது பற்றிய தகவல் வெளியானதை அடுத்த இந்த அறிக்கை விடுக்கப்படுகிறது.

சந்திரிகா தம்மைக் கொல்ல சதி நடப்பதாக முன்னரும் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் அது பற்றிய விபரங்களை அவர் பொலீஸாருக்கு வழங்கத் தவறிவிட்டார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

எம். பிக்களின் அதிகாரம்

மா. சபை உறுப்பினருக்கும் வழங்கப்படல் வேண்டும்

வாசுதேவர் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 12

மாகாணசபை உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு வாசுதேவ நாணயக்காரா பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் இந்த யோசனையை அமுல் நடத்தும்படி தாம் கோரப் போவதாகவும் அவர் கூறினார்.

இந்த யோசனைக்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா ஆதரவு தெரிவித்திருந்தார். ஆனால் அவர் அதனை அமுல் நடத்தவில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

கச்சான் இம்முறை அமோக விளைச்சல்

பொன்னாலை, தொல்புரம், பண்ணாகம் கிராமங்களில் கச்சான் செய்கை நல்ல பயனைக் கொடுத்துள்ளது. கால்நடைகளுக்கு உணவாக கச்சான் செடிகளும் விற்பனை செய்யப்படுகின்றது.

(ஓ-28)

பொல்லா வினைகள் தீர்க்கும் நல்லூர்ப் பதியின் முருகன்

முருகு என்றால் அழகு என்பார்கள். அழகுத் தெய்வத்தை முருகன் என்றனர் ஆன்றோர். முருகன், அழகன், இளையவன், தெய்வத் தன்மையும், மணமும் பொருந்தியவன் அவன் தமிழ்க் கடவுள்; கலியுக வரதன், முருக வழிபாடு இன்று பரந்து விரிந்திருக்கின்றது பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு நீல மயிலினில் வீதி வலம் வரும் மயில் வாகனன். வழிபடுவார்க்கு வரையாது வாரி வழங்கும் வள்ளல். அவனை அடைந்தார்க்கு இல்லை வினை.

வேலை வணங்குவதே நமக்கு வேலை; வேலை வணங்காத வேறென்ன வேலை என்றார் ஓர் அறிஞர். உண்மைதான். நல்லூரிலே மூலஸ்தானத்தில் வேல் தானுண்டு. இது கர்த்த ஞானத்தை உணர்த்தும்வேல். நம் வினை தீர்க்க வந்தது. இருபத்தைந்து தினங்களும் இந்திர யோகம் எனக் காட்டி தரும் நன்மையின் எல்லையிற் கால் மிதித்தாலும் வினை மாளும்.

எங்கள் கண்டாமணிகளும் நாளைசைவால் எழுந்த ஒலி ஓங்காரமாக, நாதப்பிரவாகமாக குளிர்ந்த காற்றோடு கூடி, உதய சூரியனின் மென்கதிர்களில் திளைத்துக் கொண்டிருக்கும் வானில் கலந்து, பரந்து படர்கிறது. திரளான மக்களது ''அரோகரா'' ஓசை வசந்தமண்டபத்திலிருந்து பொங்கி எழுந்து உள்வீதி வெளிவீதிகளில் நெருங்கிய பக்தர்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும் உரைகளிலும் அலைமோதிச் செல்கிறது.

இன்று கொடியேற்றம்

இன்று கந்தன் கொடியேற்றம் காணும் நன்னாள். அருள் சுரக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் ஆலய முறைப்படி அமைந்த இருத்தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற அடியார் வினை தீர்க்கும் முருகவேள் கருணை பொழி முகங்களோடு வீற்றிருக்கின்றான்.

சங்கடம் போக்கும் சண்முகன் சரவணப் பொய்கையிலே உதித்து அன்னை பராசக்தியால் அணைக்கப்பெற்று கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டான். சங்கரியின் உதித்த சங்கரி சிவன் பாகமமர்ந்து இவ்வார வேலையுடன் சிருங்காரமாய் அமர்ந்து ஒய்யாரமாய் வீற்றிருக்கும் அழகே தனி.

உற்சவம் என்பது மேலான செல்வம் எனவும், உத்தம யாகம் எனவும், பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பது எனவும் ஆகமவிதி கூறும். இதனை நடத்துபவர்களும், பார்ப்பவர்களும், நடத்துவிப்பவர்களும் புண்ணியவான்களே, ஆகவே நல்லூரில் விழாக்காணும் அத்தனை பேரும் அரும்பெரும் புண்ணிய சீலர்களாவர்,

நல்லூர் முருகனுக்குக் கொடியேறி விட்டால் ஊரெல்லாம் விழாக்கோலம் பூண்டு விடும். வீதியெங்கும் வெண்மணல் பரப்பி தண்ணீர்ப் பந்தலிட்டுத் தொண்டர் சபையினர் சமயப்பணி செய்து வருகின்றார்கள். பக்தி வெள்ளம் கரைபுரண்டோட தெய்வீகமான முருகானுபவத்தில் அன்பர்கள் திளைக்கின்றார்கள். பஜனைக் கோஷ்டி ஒரு பக்கம், அங்கப்பிரதட்சணம் செய்வார் ஒரு பக்கம், தூக்குக் காவடி, பாற்காவடி, கரகம் ஆடுவார் ஒரு பக்கம்,

நல்லூர்த் திருவிழாச் சிறப்பையும், கோயிலின் அழகையும் சிந்தனையில் நிறுத்துவது நம் உள்ளங்களைப் புனிதப்படுத்துவதோடு ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒட்டிக் கொண்டிருக்கும் காமம் அகங்காரம் முதலிய மாசுகளைப் போக்கவும் வாய்ப்பாகும். [illegible] நாவலரின் [illegible] நல்லூர்க் கந்தன் புகழ் சிறப்படைந்தது.

அதன் பின்னர் யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையொன்று நல்லூர் முருகன் தேரடியில் உருவாகியதும் சிந்திக்கத்தக்கது. கடையிற் சுவாமியின் சிஷ்யன் செல்லப்பா இவர் எப்போதும் நல்லூர்த் தேரடியில் தவம் செய்வார். அங்கு வருவோரை நாய், பேய், கரடி, புலி, சிங்கம் என்று தான் அழைப்பார். தற்செயலாக யோகர் சுவாமி அங்கு வந்ததும் மனிதனென்றே அவரை அழைத்தார். காரணம்; மக்கள் போர்வையில் மிருகக் குணங்கொண்டவர்களையே அவ்வாறு அழைத்தார். தவத்திரு யோகர்சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் சீடரானார். தான் பெற்ற இன்பம் ஈழம் வாழ் தமிழ் மக்களும் பெற வேண்டுமென விழைந்த யோகர்சுவாமிகள், நல்லூர் முருகன் பெருமை, நல்லூர்த் தேரடியின் பெருமைகளை வியந்து தனது நற்சிந்தனையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''நல்லூரான திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே இரவு பகல் காணேனடி
ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி கிளியே
நல்லூரான் தஞ்சமடி''

என்றும் இன்னும் வேறு பல கீர்த்தனைகளையும் யாத்துள்ளார்.

''நல்லூரைக் கும்பிட்டு நீ நாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்''

என்றும் பிணி, பகையாதியன நீங்கவும் நல்லூரான் பாடல்களை நற்சிந்தனையில் நாம் காணமுடிகின்றது

எமது உயிரைக் காக்கும் இருகாமாகக் கருதக்கூடிய நல்லூர் ஆலயம் புதிய பொலிவுடன் விளங்குவதை அங்கு செல்லும் பக்தர்கள் உணர்ந்து இன்புறும் நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கே பழனியாண்டவர் ஆலயமும், திருக்குளமும் அமைந்திருப்பது தனியழகைத் தருகின்றது. இராசகோபுரமும் மணிக்கோபுரமும், நிறைந்த நல்லூர் முருகன் ஆலயத்தில் ஆறுபடை ஆலயங்களின் மூவர்ண ஓவியங்களும் ஆலயத்தின் உள்வீதி வடக்குச் சுவரிலே காணப்படுகின்றது.

ஆறுபடை வீடு செல்ல முடியாத முருக பக்தர்கள் நல்லூர் ஆலயம் வலம் வரும்போது அக்குறைபாட்டை நீக்க முடிகின்றது. இந்தக் கடவுளைக் கைதொழுதால் வந்தவினை அறும். பழவினை பறந்தோடும்; சந்தனமும் சண் [illegible] நற்றொண்டு வாழ்வு கிட்டும். ★

எஸ். கே. யோகநாதன்

தேர்தல் முடிவைப் பொறுத்தே பெருமாள் நாடுதிரும்புவராம்!

ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஓக 12

எதிர்வரும் பொதுத் தேர்தல் பெறுபேறுகள் தமக்குச் சாதகமாக இருக்கும்பட்சத்திலேயே வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் தாயகம் திரும்புவார்.

ஈ பி ஆர் எல் எவ் கட்சியின் பேச்சாளர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

பெருமாள் நாடு திரும்பும் பட்சத்தில் வடக்கு — கிழக்கு மாகாண இடைக்கால சபையை மீண்டும் செயற்படுத்தும் விஷயத்தில் அவர் சம்பந்தப்படுவார் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

இப்போதைய தேர்தல் பிரசாரத்தின் போது பயன்படுத்தி வருவதற்காக திரு. வரதராஜப்பெருமாள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தமது பேச்சுகள் அடங்கிய ஒலிநாடா கஸட்டுக்களை ஈபி ஆர் எல் எவ் கட்சியினருக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

மட்டக்களப்பிலும் தேர்தல் வன்முறை

மட்டக்களப்பிலும் பரவலாகத் தேர்தல் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன.

இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஸ்ரீலங்கா பொலீஸார் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் வாழைச்சேனை ஓட்டமாவடியில் இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களிடையே மோதல் இடம்பெற்றது.

இது போன்று வேறு சில இடங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன.

எதிரணியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக 12

பொலீஸார் நடத்தும் விசாரணைகளை பொலீஸாரே குழப்பியடித்து வருகின்றனர் என்றும் —

இது பொலீஸார் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பாரிய சவாலாக உள்ளது என்றும் கொழும்பு மாவட்ட முன்னாள் ஐ. தே. க. எம்பி. சி. வி. குணரத்ன நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (எ-6)

அனுதாப வாக்குகளைப் பெறும் முயற்சியில் சந்திரிகா

ஐ. தே. க செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 12

அனுதாப வாக்குகளைப் பெறும் முயற்சியாகவே சந்திரிகா தம்மைக் கொலை செய்யச் சதி நடப்பதாக கூறுகின்றார்.

ஐ. தே. க பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா முன்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் களம் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாக தற்போது வீசத்தொடங்கியுள்ளது என்றும்—

அதனைத் தடுக்கும் முயற்சியாகவே தம்மைக் கொலை செய்யச் சதி நடப்பதாக சந்திரிகா கூறிவருகின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் [எ]

லீவுகள் ரத்து

கொழும்பு ஓக 10

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கடந்த 8 ஆம் திகதி முதல் தேர்தல் முடியும்வரை சகல அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் லீவுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது [உ-8]

நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

விடிவு ஒன்றையே வேண்டினர்!

அடியவர் ஆடுவர் பாடுவர் வீதியில்
அடியழித் திரண்டுனை ஏத்துவர்.
படியில் படுத்து ர் போகிடு நல்லூர்ப்
பதியே என்றுனைப் பரவுவர்.
கொடியும் ஏறிடக் குக்குடம் கூவிடும்,
கூத்திடும் மயிலும் அகவிடும்
விடிவு ஒன்றையே யாவரும் வேண்டினர்
வேலவா தந்திடு விரைவாய்!

—முருகனடியான்.

நேற்று முதல் 5 நாட்களுக்கு

எரி நட்சத்திரங்கள் விழும் அரிய காட்சி வானில்

புதுடில்லி, ஓக. 12

வானில் எரி நட்சத்திரங்கள் விழும் அரிய காட்சி நேற்று முதல் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நிகழவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நாட்களில் தினமும் நள்ளிரவுக்குப் பின் அதிகாலை சூரிய உதயம் வரையான நேரத்தில் எரி நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுவதை பூமியின் வட அரைக் கோளப் பகுதி நாடுகளைச் சேர்ந்த மக்கள் வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் என்றும் —

வானின் வட-கிழக்கு திசையில் இருந்து வட-மேற்குத் திசை வரையான பகுதியில் இந்த அரிய காட்சியை காணக் கூடியதாக இருக்கும் என்றும் வானியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

குடும்ப நல சேவையாளர் பரீட்சை இங்கு நடக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 12

குடும்பநல சேவையாளர் "ஆ" தரம் - 2 பணியாளர்க்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான அனுமதியை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வழங்கியுள்ளார்.

இப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

வடபிராந்திய சுகாதார திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியை அடுத்து இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவாகியுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் அமைந்துள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இப்பரீட்சை நடைபெறும்.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

சேவைக்கால செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்ட ஆரம்பக் கல்வி ஆண்டு 1 — ஆண்டு 5 கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை சேவைக் கால செயலமர்வுகள் பின்வரும் நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ் மத்திய கல்லூரி; நல்லூர்க் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ் இந்து மகளிர் கல்லூரி. (ஓ)

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையம்
நடத்தும்
மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி
காலம்:- 14-08-1994 ஞாயிறு பிற்பகல் 1 மணி
இடம்:- கந்தரோடை சவாரி மைதானம் சுன்னாகம்
A, B, C பிரிவு I ஆம் பரிசு தங்கப்பதக்கம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்பளிப்பு 10/-
நிர்வாகிகள்
(7297)

மரண அறிவித்தல்கள்

மாரிமுத்து இராமலிங்கம்

(புங்குடுதீவு - 6)

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாரிமுத்து இராமலிங்கம் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாரிமுத்து - முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, சிவபாலன் (சுவிஸ்) சின்னம்மா, கருணாநிதி (கனடா), சிவகுமார் (ஜேர்மனி), சூரியகலா (கனடா), மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தியாகராசா (திலகா ஸ்ரோர்ஸ், வவுனியா), புஷ்பவனிதா, ஜெகநாதன் (கனடா), கலாநிதி [கனடா], சரஸ்வதி [ஜேர்மனி], விஜயகுமார் [கனடா], கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராமசிப்பிள்ளை, வள்ளியம்மை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமலிங்கம், இராசையா, இணையதம்பி, காலஞ்சென்ற சின்னையா, செல்லம்மா, சிவக்கொழுந்து, நடராசா, தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற முருகேசு, இராமசாமி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்;
இ. கனகம்மா
[சகோதரி]

9, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[32344]

கதிரவேலு முருகேசு

தம்பசெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு முருகேசு நேற்று (11-08-1994) காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், மனோன்மணி (கசுயில் பல்கலைக் கழகம், யப்பான்), கமலமணி, தயாபரன் (சுங்கத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேராசிரியர் சண்முகதாஸ் (யாழ் பல்கலைக் கழகம்), திரு விக்கினேஸ்வரன், திருமதி வசந்தி ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி கலைச்செல்விகுமாஸ்ரீ (அவுஸ்ரேலியா), திருமதி திருநங்கை ஞானசபேசன், திரு ச. செந்தூரன் (லண்டன்), செல்வி வி. சர்மினி, செல்வன்கள் த. ஆதவன், த. சிறீரமணன் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வி ஞா. சேந்தினியின் அன்புப் பாட்டனுமாவார்

ஈமக்கிரியைகள் இன்று 12-08-1994 பி. ப. 3 00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காகக் கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(மருமகன்)

அம்பலவாணர் பாதை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(32345)

படை அதிகாரிகள் உரிய வயதை அடைய முன் ஓய்வுபெறத் தடை

ஒபரேஷன் லிபரேஷனுக்குப் பிறகே பலர் விலகிச்சென்றனர்

கொழும்பு, ஓக. 12

போர் முனைகளில் பணிபுரியும் அனுபவமிக்க படை அதிகாரிகள் இராணுவத்தில் இருந்து உரிய வயதை அடைவதற்கு முன் ஓய்வுபெற்றுச் செல்வதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும்சண்டை ஏற்பட்டதன்பின்னர் குறைந்தது 24 அனுபவமிக்க படை அதிகாரிகள் உரிய வயதை அடைவதற்கு முன்னர் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டனர்.

தடை உத்தரவு கொண்டு வரப்படாமல் இருந்திருப்பின் இன்னும் பல அதிகாரிகளை இராணுவம் இழந்திருக்கும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர்க் களத்தில் பணி புரியும் அனுபவமிக்க படை அதிகாரிகள், என்ன காரணங்களுக்காக முன் கூட்டியே ஓய்வுபெற்றுச் செல்கிறார்கள் என்பதைக் கண்டறியும் முயற்சிகளை உயர் வட்டாரங்கள் எடுக்கவில்லை என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராணுவ வட்டாரங்களின் படி இப்படி ஓய்வுபெற்ற அதிகாரிகளில் பதினேழு லெப்டினன்ட் கேணல்களும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் போர்க் களத்தில் படையணிகளையும் ரெஜிமன்ட்களையும் கட்டளைத் தளபதிகளாக இருந்து வழிநடத்தியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வுபெற்றவர்களில் பெரும்பாலோர் 1987 இல் இடம்பெற்ற வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தரை இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட காலாட் படையின் மூன்று படையணிகளின் மூன்று கட்டளைத் தளபதிகளும் ஓய்வுபெற்றுவிட்டனர்.

இராணுவ கொமாண்டோ ரெஜிமண்டின் இரு அதிகாரிகள், காலாட்படை பட்டாலியன்களின் ஏழு கொமாண்டர்கள் பீல்ட் என்ஜினியர் பிரிவின் ஒரு கட்டளைத் தளபதி, கவசவாகன அணியைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட அதிகாரிகள், ஆட்டிலறி பிரிவைச் சேர்ந்த இரண்டு கட்டளைத் தளபதிகள், உயர் நிலை விசேட படையைச் சேர்ந்த இரண்டு மேஜர்கள் ஆகியோரும் முன் கூட்டியே ஓய்வுபெற்றவர்களில் அடங்கியுள்ளனர்.

10 அல்லது 20 ஆண்டுகள் சேவை புரிந்த 40 அல்லது அதற்கும் குறைவான வயதுள்ளவர்களே ஓய்வு பெற்றுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தப்பியோடியோரில் லெப்டினன்ட்களும்

உரிய வயதை அடைவதற்கு முன் ஓய்வுபெற்ற இந்த அதிகாரிகளை விட, கணிசமான அளவு இளம்வயதினரான லெப்டினன்ட்களும் இரண்டாவது லெப்டினன்களும் கடந்த மூன்றரை ஆண்டுகளில் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது:

1992 ஆகஸ்ட் 8 ஆம் திகதி அராலித் துறை கண்ணி வெடித்தாக்குதலில் ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர்ஜெனரல் விஜயவிமலரத்ன உட்பட பல படை அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த சில ஆண்டுகளாக அரசியல் இராணுவரீதியில் போடப்பட்ட தப்புக்கணக்குகள் காரணமாக, வடபகுதிப் போர்முனையில் விடுதலைப் புலிகள் தங்கள் பலத்தை அதிகரிக்க அனுமதிக்கப்பட்டது என்று சில பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி த ஐலண்ட் தகவல் வெளியிட்டுள்ளது.

''1990 ஜூனில் பொலிஸாரை விடுதலைப்புலிகளிடம் சரணடையும்படி உத்தரவிட்டதில் இருந்து நாம் தவறுகளை விட்டுக்கொண்டே வருகிறோம்'' என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

1990 ஜூன் மாதத்தின் பின்னர் அனுபவமிக்க படை அதிகாரிகள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டு விட்டனர்.

1990 இன் பின்னர் யுத்தத்தில் கொல்லப்பட்ட, காயமடைந்த, சண்டையின் போது காணாமற் போன மற்றும் விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட படையினரின் எண்ணிக்கை 4 ஆயிரத்திற்கு அதிகம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

கிராம அலுவலர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 12

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சகல கிராம அலுவலர்களுக்குமான — உரமானியம் தொடர்பான — கலந்துரையாடல் இன்று வெள்ளி முற்பகல் 9 மணிக்கு பிரதேசசெயலகத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக 12

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்துக்கான தெரிவுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் தெல்லிப்பழை கிறிஸ் கொம்பஸ் அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் அணி மோதும். (இ-3)

★ ★ ★

கல்கா என்ற பிறைஸ் கிண்ணத்துக்காக யாழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 6 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கட் போட்டி ஓ. எம். ஆர். மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. போட்டி தொடர்ந்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறும். (ஓ 20)

★ ★ ★

யாழ். றோட்டறக்ற் கழகம் எஸ். எம் பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் நடத்தும் 90 நிமிட உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சராவி அண்ணா வி. க. அணி மோதும். (ஐ)

பாலர் பாடசாலை விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 12

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும், புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் ராஜன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் 1 30 மணிக்கு ஆரம்பமாகும்.

சட்டத்தரணி வி. சிவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் வட பிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர் வி. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். (ஐ-15)

ஆலயங்களில்

மீசாலை வெள்ளை மாவடி திருநீலகண்ட பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று (வெள்ளி) நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறும். (ஐ 117)

★ ★ ★

வியாபாரிமூலை இன்பருட்டி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று இடம் பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் இராமாயணம் பற்றி மூத்த சமய விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)

★ ★ ★

யாழ். வண்ணை வடமேற்கு பிரப்பம்பதி ஸ்ரீ வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம், இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

வல்வை, தெடியாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

மஹோற்சவ விசேட சமயச் சொற்பொழிவுகள் தொடரில் இன்று மூத்த சமய விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா ''தெய்வச் சேக்கிழார்'' எனும் பொருளில் உரையாற்றுவார். (அ)

★ ★ ★

திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார்-ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இரதோற்சவம் 20 ஆம் திகதி காலை 8 மணிக்கும், தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 8 மணிக்கும் நடைபெறும்; உற்சவகாலத்தில் கம்பராமாயண தொடர் விரிவுரையை திரு த. நாகேஸ்வரன் தினமும் இரவு 8 30 மணிக்கு நிகழ்த்துவார். ([illegible] 31)

வடக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கையை நான் ஆதரிக்கவில்லை.

★ ஆனால் மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளுடனான பகுதியுடன் தமிழர்களுக்கு பெருமளவிலான தன்னாட்சி வழங்கப்படும்,

★ வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வாக்காளப் பெருமக்களின் இணக்கத்தையும், ஒப்புதலையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கேட்டிருக்கிறது.

★ தேர்தலில் வெற்றியீட்டினால் நான் நிச்சயம் வடமாகாணத்துக்கு சென்று மக்களையும், சம்பந்தப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண முயற்சி மேற்கொள்வேன்.

★ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து ஆலோசித்து வருகின்றேன்.

★ ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எண்ணியுள்ளேன்.

மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட அரசுக்கு எதிராக ஆயுதக்குழு எதுவும் கிளர்ச்சி செய்யுமாயின் அவர்களைக் கட்டுப்படுத்துவது அரசின் கடமையாகும்.

சமாதான முயற்சிகள் தோல்வியாணும் பட்சத்தில், விடுதலைப் புலிகள் யுத்தத் தோற்றத்தை மாற்றாவிடின் விருப்பமின்றியேயாயினும் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவதைத்தவிர வேறு மாற்று வழியில்லை.

★ விடுதலைப்புலிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இதுவரை தொடர்புகொள்ளவில்லை.

★ தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு

★ அரசியல் ரீதியில் சமாதானத்தீர்வு காண்பதுதான் எங்கள் நோக்கம். எங்கள் விருப்பம். இதற்காக எங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுப்போம்

— இது தோல்வியடைந்தால் ஒரு குறிப்பிட்ட குழு கிராமங்கள் மீது, மக்கள் மீதும் தாக்குதல் நடத்துவதை பார்த்துக்கொண்டு அரசு வாளாவிருக்கமுடியாது

விடுதலைப்புலிகளை நம்புகிறீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு — அபிப்பிராயம் சொல்வதற்கு இல்லை என்று சந்திரிகா பதில் அளித்தார்.

பொருளாதாரம்

பொருளாதாரத்தைப் பற்றி குறிப்பிட்டபோது, முன்னணி திறந்த சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், இலங்கையின் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கும், வளத்துக்கும் தனியார்துறை மிக அவசியம் என்பதை உணர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் ஐ. தே. கட்சியைப்போல் அல்லாது முன்னணியின் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு நன்றாக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும் கொள்கைகளாக இருக்கும் என்று கூறினார்.

தேர்தல் பரப்புரை குறித்து உங்களுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு ஆம் என்று பதிலளித்த சந்திரிகா இப்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவமுறை இல்லாமல் இருந்தால் முன்னணிக்கு அமோக பெரும்பான்மை கிடைத்திருக்கும் என்றும் —

அது எப்படியாயினும் தேர்தலில் வெற்றி நிச்சயம் கூட்டணிக்கே என்றும் கூறினார். (அ-அ-3-6)

குருபூசை விழா

யாழ்ப்பாணம், ஓக 12

முத்துக்குமாரு மயிலாசனம் சுவாமியின் 9 ஆம் ஆண்டு குருபூசை விழா இன்று வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதியில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். [•]

நாளை

சுன்னாகம் இந்து சமய அபிவிருத்திச் சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜையும் பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஓ-89)

இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர்

யாழ்ப்பாணம். ஓக. 12

இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட புதிய முகாமையாளராக திரு எம். சண்முகசுந்தரம் பதவி ஏற்றுள்ளார்.

யாழ். மாவட்ட முகாமையாளராக இதுவரை பணியாற்றி வந்த திரு கே. கணேசமூர்த்தி அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்வதை அடுத்து அவரின் இடத்திற்கே திரு. எம். சண்முகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-4)

மேலதிக உணவு முத்திரை

தென்மராட்சி ஓக .12

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் உள்ள சகல மாணவர்களுக்குமான மேலதிக உணவு முத்திரைகள் நாளை அந்தந்தப் பிரிவுகிராம அலுவலர்களால் வழங்கப்படவுள்ளன.

இவ்வாண்டு ஜனவரி முதல் மாதம் ரூபா ஐம்பது பெறுமதியான இம்முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் கலாசார மண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6-7. 30 மணிவரை கே. ஆ. சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி.

இரவு 7 30-9 மணிவரை சுப கணேசசுந்தரம் நிகழ்த்தும் கதாப்பிரசங்கம்- முருகன் பெருமை.

✲ நல்லை ஆதின மண்டபத்தில்

பி. ப. 2 மணி முதல் செல்வி சூரியகுமாரி மார்க்கண்டுவின் தெய்வீக இசை.

(அ-4-111)

முருகு புறப்பட்டது

வடமராட்சி ஓக 12

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்ததையடுத்து 'முருகு' கப்பல் நேற்று மாலை இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. [இ-173]

தமிழரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கவில்லை.

கொழும்பில் உள்ள பி. பி. ஸி செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி இலங்கை பற்றிய கண்ணோட்டத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

17 ஆண்டுகளின்பின்னர்புதிய கட்சி அரசுக்கு வரவேண்டும் என்று நிலவும் பரந்த கருத்தும் தான் இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு பெரும் சக்தியாக துணை நிற்கிறது என்றும் அவர் கூறினார்.

3 வயதுக்குக் குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு ஐ. தே. க. ஆட்சியைத் தவிர வேறு கட்சிகளின் ஆட்சி நிர்வாகம் பற்றி எதுவும் தெரியாது. இதனால் இளைஞர், யுவதிகளைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் உட்பட சிறுபான்மைத் தலைவர்கள் சந்திரிகா பிரதமரானால் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணப்படும் என்று நம்புகின்றனர்.

கிழக்கில் இன அடிப்படையில் வாக்குகள் அளிக்கப்படக் கூடும். தமிழ், சிங்களவர். முஸ்லிம்கள் சமமான எண்ணிக்கையில் அங்கு வாழ்கின்றனர்.

தமிழ் கட்சிகள் பல போட்டியிடுவதால் தமிழர் வாக்குகள் பிரிந்து அவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை குறைக்கக் கூடும்

யாழ் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர் இதனால் சுமார் 10 லட்சம் தமிழர் வாக்குரிமையை இழந்துள்ளனர். இது அரசார்பு ஈ. பி. டி. பிக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தும்.

தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிடின் ஈ. பி. டி. பி போன்ற சிறிய கட்சிகளுக்கு மவுசு தோன்றும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்

இப்படி கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ-6)

மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் செல்லத்துரை

(அராலி வடக்கு)

அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி பாக்கியம் செல்லத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், செல்வி தனலட்சுமி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சிவபாதம் (சுவிஸ்) செல்வி வசந்திரா (ஆசிரியை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. குலேந்திரன், பராசக்தி ஆகியோரின் மாமியாரும், காரைநகர் களவிப் பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆடியர் ஆறுமுகம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், சண்முகம், பொன்னம்பலம், பூரணம், கனகம்மா, நடராஜா ஆகியோரின் சகோதரியும், துஷ்யந்தனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 2 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செ. தனலட்சுமி
(மகள்)

செட்டியாமடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(32346)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் [illegible] 161/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.